பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(14.08.2024 முதல் 18.08.2024 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182

E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 065 (08) PJN/GKMS/2024 தேதி: 13.08.2024

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (08.08.2024 முதல் 12.08.2024 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -18.08.2024 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **08/08** | **09/08** | **10/08** | **11/08** | **12/08** | | நாள்-1<br>14/08 | நாள்-2<br>15/08 | நாள்-3<br>16/08 | நாள்-4<br>17/08 | நாள்-5<br>18/08 |
| 60.4 | 4.2 | 0.0 | 32.0 | 0.0 | மழை (மி.மீ) | 3 | 0 | 5 | 27 | 7 |
| 36 | 36 | 36 | 36 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 33 | 33 | 32 | 31 | 30 |
| 24 | 25 | 25 | 25 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 27 | 27 | 26 | 25 | 24 |
| 4 | 3 | 4 | 4 | 1 | மேக மூட்டம் | 7 | 6 | 6 | 8 | 7 |
| 61-90 | 57-92 | 63-79 | 59-84 | 59-83 | ஈரப்பதம் (%) | 50-80 | 50-80 | 50-80 | 60-80 | 60-80 |
| 4 | 4 | 4 | 4 | 3 | | 16 | 18 | 16 | 14 | 14 |
| மேற்கு<br>தென்<br>மேற்கு | வடக்கு<br>வட<br>கிழக்கு | மேற்கு<br>தென்<br>மேற்கு | மேற்கு<br>வட<br>மேற்கு | மேற்கு<br>வட<br>மேற்கு | காற்றின் திசை | தெற்கு<br>தென்<br>கிழக்கு | தெற்கு | தெற்கு | கிழக்கு<br>வட<br>கிழக்கு | கிழக்கு<br>தென்<br>கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (14.08.2024 முதல் 18.08.2024 வரை):**

ஆகஸ்ட் 14, 16 மற்றும் 18 தேதிகளில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகஸ்ட் 17 தேதியில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்ப நிலை 24-33 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14-18 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஆகஸ்ட் 18 லிருந்து 24 வரை மழை (8.0 மி.மீ) இயல்பிற்கு அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (31.7 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.6 டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பருத்தி | காய்க்கும் பருவம் | பருத்தியில் மாவுப் பூச்சியினைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு தையாமீதாக்சம் (Thiamethoxam 25 WG) 0.2 கிராம் அல்லது பியுப்ரோபிசின் ( Buprofezin 25 SC) 2 மி.லி என்ற மருந்தினை தெளிக்கவும். |
| | | பருத்தியில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு அசாடிராக்டின் 0.03 (300 ppm) 5-10 மி.லி அல்லது தையாமீதாக்சம் (Thiamethoxam 25 WG) 0.4 கிராம் என்ற மருந்தினை தெளிக்கவும். |
| கத்தரி | காய்க்கும் பருவம் | கத்தரி பயிரில் காய்ப்புழு மற்றும் புரோடினியா புழு க்களைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு பேசில்லஸ் துரின்ஜேன்சிஸ் 2 கிராம் அல்லது நோவலுரான் 10% EC 1மி.லி அல்லது ப்ளூபென்டமைட் 0.2-0.3 மி.லி ஆகியவற்றை உபயோகிக்கலாம். |

| | | |
|---|---|---|
| கால்நடை | உண்ணிக்காய்ச்சல் | கால்நடைகளை உண்ணிக்காய்ச்சல் நோய் பாதிக்க வாய்ப்பு உள்ளதனால், நோய் பாதிப்பில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க, நோயின் அறிகுறி தென்பட்டதும், உடனே சிகிச்சை அளிக்க அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அனுகவும். முதலில் தீவனம் உண்பதை குறைப்பதால் பால் உற்பத்தி குறையும். அதிகளவிலான காய்ச்சல், சாணம் இறுகுவது அல்லது கழிச்சலாக வெளியேறுவது, சிறுநீர் நிறம் மாறுதல் போன்றவை, இதன் அறிகுறிகள். உண்ணிக்காய்ச்சல் இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். உண்ணி தங்கும் செடி, புதர், சுவற்றின் கீரல், ஓட்டை, சந்து போன்றவற்றில் மருந்தைத் தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை வரை எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதை தவிர்க்கவும்.

**முதல்வர்**